පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
பொலிஸ் ஊடகப் பிரிவு
POLICE MEDIA DIVISION
14 ஆம் மாடி, சுகுறுபாய,
பத்தரமுல்லை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දිනය திகதி Date | 23.12.2024 நேரம்10.45 மணி | දුරකථන தொலைபேசி Telephone | 011-2887973 | මගේ අංකය எனது இலக்கம் My No | D/Media/out/ 1876/2024 | ඊ මේල් மின்னஞ்சல் E-mail | dir.media@police.gov.lk |

**01. துப்பாக்கி சூடு நடாத்தி மனித படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவர் கைது – மேல் மாகாண தெற்குக் குற்றப் பிரிவு.**

14.12.2024 அன்று மீகொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாகஹாவத்தை பிரதேசத்தில் காரில் பயணித்த ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தினால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக மீகொட பொலிசார் மற்றும் மேல் மாகாண தெற்குக் குற்றப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

அதற்கமைய, மேல் மாகாண தெற்குக் குற்றப் பிரிவினர்கள் மேற் கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சந்தேக நபரையும் அதற்கு உடந்தையாக இருந்த சந்தேக நபர் ஒருவரையும் 19.12.2024 அன்றைய தினம் கைது செய்யப்பட்டனர்.

இச் சந்தேக நபர்கள் இருவரிடமும் மேற்கொண்ட விசாரணைகளில், இக் குற்றத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் ஹோமாகமை மற்றும் மீகொட பொலிஸ் பிரதேசங்களில் வைத்து 22.12.2024 அன்று மாலை வேளையில் கைது செய்துள்ளனர்.

**கைது செய்தவர்கள் பாதுக்கை மற்றும் மீகொடை பிரதேசத்தில் வசிக்கும் 22, 26 மற்றும் 38 வயதுகளுடைய சந்தேக நபர்களாகும்.**

இவர்களில் ஒருவர் இக்குற்றத்தை புரிவதற்காக துப்பாக்கிச் சூடு நடாத்திய நபருடன் பயணித்த சந்தேக நபர் ஆவார். மற்ற இருவர் இக் குற்றதிற்காக திட்டம் தீட்டியமை மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

மேல் மாகாண தெற்கு குற்றப் பிரிவினர் மற்றும் மீகொடை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**பொலிஸ் ஊடகப் பிரிவு**